tamilguru.lk

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கல்வி அமைச்சு**

நாட்டின் தேசிய பாடசாலைகளில் நிலவும்
சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்கள் தொடர்பாக பட்டதாரிகளை இலங்கை ஆசிரிய சேவை 3- 1(அ) தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யும் திறந்த போட்டி பரீட்சை - 2023

நாட்டின் தேசிய பாடசாலைகளில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக ஆண் மற்றும் பெண் இருபாலரிட மிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதற்கான விண்ணப்பம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் "Our Services" என்பதன் கீழ் "Online Applications - Recruitment Exams" இல் வெளியிடப் பட்டுள்ளதுடன் விண்ணப்பங்களை இணையவழி மூலமாக மட்டுமே சமர்ப்பிக்க முடியும். விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்2023.12.01ஆம் திகதியாகும். இந்த தேர்வு2023ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் நடைபெறும்.

02. சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறைமை:

2.1 இதற்காக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இந்த வர்த்தமானி அறிவித்தலில் 10.1 ஆம் வாசகத்திற்கமைவாக எழுத்துமூல போட்டி பரீட்சை ஒன்று நடாத்தப்படும்

2.2 எழுத்துமூல போட்டி பரீட்சையின் அனைத்து கேள்விகளுக்கும் தோற்றி ஒவ்வொரு கேள்வித் தாளிலும் குறைந்தபட்சம் 40% மதிப்பெண்களைப் பெறும் விண்ணப்பதாரர்களின் மொத்த மதிப்பெண்களின் முன்னுரிமை வரிசையில் உரிய விண்ணப்பதாரர்களின் வெற்றிட எண்ணிக்கையை விட மூன்று மடங்கான விண்ணப்பதாரர்களை இந்த வர்த்தமானி அறிவித்தலின் 10.2 ஆம் வாசத்திற்கமைவாக நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். பொது நேர்முகத் தேர்விற்கு தகுதி பெற்றவர்களின் பட்டியல் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும். (தகைமைகள் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பதாரர்கள் பொது நேர்முகத் தேர்வில் நிராகரிக்கப்படுவார்கள்)

2.3 பொது நேர்முகத் தேர்வில் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் இந்த வர்த்தமானி அறிவித்தலின் 10.3 ஆம் வாசகத்தின் படி செயன்முறைப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவார்கள். செயன்முறைப் பரீட்சையில் பெறப்பட்ட புள்ளிகள் கல்வி அமைச்சினால் நேரடியாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படும். செயன்முறை பரீட்சையின் போது விண்ணப்பதாரர்களுக்கு குறிப்பிட்ட வெற்றிட பட்டியல் காட்சிப்படுத்தப்படுவதுடன், விண்ணப்பதாரர்களினால் வெற்றிடங்கள் நிலவும் பாடசாலைகள் தொடர்பாக முன்னுரிமை வழங்கப்படும் தமது விருப்பை தொடரொழுங்கில் காட்டப்பட வேண்டும்.

2.4 செயன்முறைப் பரீட்சையில் மற்றும் எழுத்து மூல பரீட்சையில் பெறப்படும் மொத்த மதிப்பெண்களின் முன்னுரிமை தொடரொழுங்கு, கோரப்பட்ட மொழிமூலம், பாடம் மற்றும் பாடசாலை அடிப்படையில் நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்கமைவாக ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

2.5 இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு உரிய நியமன பாடங்களின் வெற்றிடம் உப அட்டவணை 04 இல் குறிப்பிடப்பட்டுள்ளன. உப அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஆசிரிய வெற்றிடங்கள் தொடர்பாக மாத்திரம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

**குறிப்பு 1**
ஒரே பாடசாலைக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் பலர் சமமான மதிப்பெண்களைப் பெற்றிருக்கும் சந்தர்ப்பத்தில் பணியமர்த்தல் தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளரினால் முடிவுசெய்யப்படும்.

2.6 இந்த ஆட்சேர்ப்பு செய்யப்படுவது பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட முறையின் கீழ் என்பதால் ஐந்து (05) வருடங்கள் கடக்கும் வரையில் இடமாற்றங்கள் வழங்கப்பட மாட்டாது

03. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்

3.1 இந்த பதவி நிரந்தரமானது. உங்களுக்குரிய ஓய்வூதிய சம்பள முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கொள்கை அடிப்படையிலான தீர்மானங்களுக்கு உட்படவேண்டும்.

3.2 இந்த பதவிக்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் மூன்று வருட (03) தகுதிகான் காலத்திற்கு உட்படுவதுடன், அந்த மூன்றுவருட (03) காலத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி பெற வேண்டும்

3.3 18/2020 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் அதனுடன் தொடர்புடைய சுற்றறிக்கைகளின் படி அரசகரும மொழி தேர்ச்சியை நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

3.4 அரசாங்க சேவைகள் ஆணைக்குழு செயல்முறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரசாங்க நிதி ஒழுங்குவிதிகளுக்கும் திணைக்களம்சார் அனைத்து கட்டளைகளுக்கும் இந்த நியமனம் உட்பட்டிருக்கும்.

3.5 2014.10.23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1885/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமாக பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரிய சேவைப் பிரமாணக்குறிப்பின் ஒழுங்குவிதிகளுக்கும் அந்த சேவை பிரமாணக்குறிப்பில் இதற்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் அரசாங்க சேவை நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளுக்கும் இந்த நியமனம் கட்டுப்படுகின்றது.

04. **சம்பள அளவு:**

இந்த பதவிக்குரிய 03/2016 (iv) ஆம் இலக்க பொது நிர்வாக சம்பள சுற்றறிக்கைக்கமைவாக GE 01-2016 ரூபா 31,490.00 -445 × 6 -525 × 7 - 600×2 ரூபா 39,035 (மாதாந்த) சம்பள அளவு உரித்தாகும். இலங்கை ஆசிரிய சேவை 3 ஆம் வகுப்பில் I (அ) தரத்திற்காக இந்த சம்பள அளவின் 14 ஆவது சம்பள படியான ரூபா 37835.00 சம்பளத்தில் அமர்த்தப்படும். இதற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்கத்தினால் அவ்வப்போது வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் உங்களுக்கு உரித்தாகும்.

05. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்:**

5.1 2014.10.23 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1885/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரிய சேவை பிரமாணக்குறிப்பின் பிரகாரம் 2023.12.01 ஆம் திகதிக்கு பின்வரும் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

5.1.1 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் மூலமாக அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டங்கள் வழங்கும் நிறுவனம் ஒன்றின் மூலமாக அல்லது வழங்கப்பட்ட பட்டம் ஒன்றுடன் குறிப்பு 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் மூலமாக அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டங்கள் வழங்கும் நிறுவனம் ஒன்றின் மூலமாக அல்லது வழங்கப்பட்ட பட்டம் ஒன்றுடன் குறிப்பு 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

5.1.2 பட்டதிற்காக தொடர்ந்துள்ள பிரதான பாடம்/ பாடங்களுக்கு அமைவாக மாத்திரம் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்கும் பாடத்திற்குரியதாக தமது பட்டத்திற்காக தொடர்ந்துள்ள பாடங்களின் (Credit எண்ணிக்கையில்) 1/3 பகுதியைப் பூரணப்படுத்தியவர்களாக இருத்தல் வேண்டும்.

மிக முக்கியம் மேலே 5.1.1 மற்றும் 5.1.2 நிபந்தனைகளுக்கு மேலதிகமாக விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்தும் போது கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாகவும் கருத்தில் கொள்ளவேண்டும்.

- தமது பட்டத்திற்கமைய தாம் விண்ணப்பிக்கக்கூடிய பாடங்கள் தொடர்பாக விண்ணப்பதாரர்கள் கவனம் செலுத்துதல் வேண்டும்.
- உயர்தரம் மற்றும் சாதாரண தர பாடத்திட்டத்திற்குரியதாக பட்டத்தில் காணப்படும் பாடங்கள் தகைமைகளை பரீட்சிக்கும் போது கருத்தில் கொள்ளப்படும்.
- விண்ணப்பிக்கும் பாடத்திற்குரியதாக பிரதான பாடமொன்றுடன் கூடிய பட்டத்தைக் கொண்டிராத சந்தர்ப்பங்களில்பெற்றுக் கொண்டுள்ள பட்டத்துடன் விண்ணப்பதாரர் கொண்டிருக்கும் மேலதிக தகைமை களும் கருத்தில் கொள்ளப்படும்.
- முழுமையாக விவரிக்கப்பட்ட பெறுபேற்று ஆவணத்தில் (Transcript) உள்ளடங்கும் பாடங்கள் (credit எண்ணிக்கை) குறிப்பிடப்படவில்லை எனின் அதனை உரிய பல்கலைக்கழகத்தினூடாக உறுதி செய்து அதற்குரிய ஆவணங்களை பொது நேர்முகப் பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் முன்னிலைப்படுத்த வேண்டும்
- பட்டத்தில் தொடர்ந்துள்ள பாடங்கள் தொடர்பாக ஏற்படக்கூடிய முரண்பாடுகள் தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கல்விஅமைச்சின் செயலாளரையே சாரும்.

5.1.3 இலங்கை ஆசிரியர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பிலுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக அனைத்து விண்ணப்பதாரர்களும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சிங்கள மொழி அல்லது தமிழ்மொழியில் ஒரு பாடமாக சித்திபெற்றிருத்தல் வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் உள்நாட்டு க.பொ.த (சா.த) பரீட்சைக்கு சமமாக ஏற்றுக்கொள்ளும் வேறு பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களும், இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

**குறிப்பு 2**
கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு பாடங்கள் தொடர்பாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள், ஆகக் குறைந்த தகைமைகளாக கருத்தில் கொள்ளப்படும்

க.பொ.த. (உயர் தர) மற்றும் 13 வருட தொடர்ச்சியான கல்வித் திட்டத்தின் கீழ் உள்ள பாடங்கள்

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தகைமை |
|---|---|---|
| 101 | இரசாயனவியல் Chemistry | நான்கு வருட விசேட பட்டப் பாடநெறியொன்றில் பிரதான பாடமாக அல்லது ஏனைய பாடமொன்றாக பட்டப் பாடநெறியின் மொத்தப் பாடத் தொகுதியில் 1/3 பகுதியை க.பொ.த. (உயர் தர) பாடத்திட்டத்திற்கமைவானதாக தொடர்ந்திருத்தல் அல்லது மூன்று வருட பட்டப் பாட நெறியொன்றில் மொத்தப் பாடத்தொகுதியில் ஆகக் குறைந்தது 1/3 பகுதியை உரிய பாடத்திற்குரியதாக தொடர்ந் திருத்தல். |
| 102 | பௌதீகவியல் Physics | நான்கு வருட விசேட பட்டப் பாடநெறியொன்றில் பிரதான பாடமாக அல்லது<br>ஏனைய பாடமொன்றாக பட்டப் பாடநெறியின் மொத்தப் பாடத் தொகுதியில் 1/3 பகுதியை க.பொ.த. (உயர்தர) பாடத் திட்டத்திற் கமைவானதாக தொடர்ந்திருத்தல் அல்லது<br>மூன்று வருட பட்டப் பாடநெறியொன்றில் மொத்தப் பாடத் தொகுதியில்ஆகக்குறைந்தது 1/3 பகுதியை உரிய பாடத்திற்குரியதாக தொடர்ந்திருத்தல். |
| 103 | உயிரியல் Biology | நான்கு வருட விசேட பட்டத்தில் பிரதான பாடமாக தாவரவியல் விஞ்ஞானம்/ தாவரவியல் உயிரியல் அல்லது கால்நடை விஞ்ஞானத்தைத் தொடர்ந்திருத்தல் மற்றும் பிராதன பாடமாக தாவரவியல் விஞ்ஞானம்/தாவர உயிரியலைத் தொடர்ந்திருப்பின் அடுத்த பாடமாக கால்நடை விஞ்ஞானத்தையும், பிரதான பாடம் கால்நடை விஞ்ஞானம் எனின் அடுத்த பாடமாக தாவரவியல் விஞ்ஞானம்/ தாவர உயிரில் பாடத்தையும் ஆகக்குறைந்தது இரண்டு வருட காலம் உயர் தர பாடத்திட்டத்திற்கமைவானதாக தொடர்ந்திருத்தல் அல்லது மூன்று வருட சாதாரண பட்டத்தில் தாவரவியல் விஞ்ஞானம்/ தாவர உயிரியல் மற்றும் கால்நடை விஞ்ஞானம் ஆகிய இருபாடங்களும் ஒன்றிணைந்ததாக மொத்தப் பாடத்தொகுதியின் ஆகக்குறைந்தது 1/3 பகுதியைத் தொடர்ந்திருத்தல் |

tamilguru.lk



| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தகைமை |
|---|---|---|
| 104 | விவசாய விஞ்ஞானம் Agricultural Science | விவசாய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞானமானி பட்டம் (B.Sc. Agricultural Technology and Management)<br>விவசாய விஞ்ஞானமானி பட்டம் (B.Sc. Agriculture)<br>விவசாய வளங்கள் முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானமானி (B.Sc. Agricultural Resources Management and Technology)<br>விவசாய வியாபார முகாமைத்துவ விஞ்ஞானமானி பட்டம் (B.Sc. Agri Business Management)<br>ஏற்றுமதி விவசாய விஞ்ஞானமானி பட்டம் (B.Sc. Export Agriculture)<br>மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பட்டங்கள் அல்லது<br>உயர்தர விவசாய விஞ்ஞானப் பாடத்திட்டத்திற்கமைவானதாக மொத்தப் பாடத்தொகுதியில் ஆகக்குறைந்தது 1/3 பகுதி உரிய பாடத்திற்குரிய உள்ளடக்கங்களைக் கொண்டுள்ள ஏதேனுமொரு விஞ்ஞானமானி பட்டமொன்றைத் தொடர்ந்திருத்தல். |
| 105 | இணைந்த கணிதம் Combined Mathematics | நான்கு வருட விசேட பட்டமொன்றில் பிரதான பாடமொன்றாக பிரயோக கணிதம் அல்லது தூய கணிதத்தைத் தொடர்ந்திருத்தல் மற்றும் பிரதான பாடம் பிரயோக கணிதம் எனின் அடுத்த பாடமாக தூய கணிதத்தையும், பிரதான பாடம் தூய கணிதம் எனின் அடுத்த பாடமாக பிரயோக கணிதத்தையும் ஆகக்குறைந்தது இரண்டு வருடங்களேனும் தொடர்ந்திருத்தல் அல்லது<br>மூன்று வருட சாதாரண பட்டமொன்றில் பிரயோக கணிதம் அல்லது தூயகணிதம் ஆகிய இரண்டு பாடங்களும் ஒன்றிணைந்ததாக மொத்தப் பாடத்தொகுதியின் ஆகக்குறைந்தது 1/3 பகுதியைத் தொடர்ந்திருத்தல். |
| 106 | பொறியியல் தொழில் நுட்பவியல் Engineering Technology | பட்டத்தில் மொத்தப் பாடத்தொகுதியில் 1/3 பகுதி நிர்மாணம், எந்திரவியல், மின்மற்றும் இலத்திரனியல் போன்ற பாடத்துறைகளை உள்ளடக்கியதாக பட்டத்தைத் தொடர்ந்திருத்தல் அல்லது பொறியியல் பட்டமொன்றைப் (நிர்மாணம், எந்திரவியல், மின்மற்றும்/அல்லது இலத்திரனியல்) பெற்றிருத்தல். |
| 107 | உயிர் முறைமை தொழில் நுட்பவியல் Bio Systems Technology | விவசாய தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவ விஞ்ஞானமானி பட்டம் (B.Sc. Agricultural Technology and Management)<br>விவசாய விஞ்ஞானமானி பட்டம் (B.Sc. Agriculture)<br>விவசாய வளங்கள் முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானமானி பட்டம் (B.Sc. Agricultural Resources Management and Technology)<br>உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்பட்டம் (BBST)<br>மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பட்டங்கள் அல்லது<br>உயர் தர உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் பாடத்திட்டத்திற்கமைவானதாக மொத்தப் பாடத்தொகுதியில் ஆகக்குறைந்தது 1/3 பகுதி உரிய பாடத்திற்குரிய உள்ளடக்கங்களைக் கொண்டுள்ள ஏதேனுமொரு விஞ்ஞானமானி பட்டமொன்றைத் தொடர்ந்திருத்தல் |
| 108 | தொழில்நுட்ப வியலுக்கான விஞ்ஞானம் Science for Technology | விஞ்ஞானமானி பட்டத்தில் காணப்படும் மொத்தப் பாடத்தொகுதியில் 1/3 பகுதி பௌதீகவியல் பாட உள்ளடக்கங்களைக் கொண்ட பட்டமொன்றைத் தொடர்ந்திருத்தல். |
| 109 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் Information & Communication Technology | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான விசேட பட்டமொன்று அல்லது<br>தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பிரதான பாடமொன்றாகக் கொண்ட பட்டமொன்று. பட்டப் பாடநெறியின் மொத்த பாடத்தொகுதியின் 1/3 பகுதி தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்திற்குரியதாக இருத்தல் வேண்டும். |
| 110 | ஆங்கிலம் English | ஆங்கிலம் தொடர்பான கலைமானி (விசேட) பட்டம் ஒன்று அல்லது ஆங்கிலம் முதன்மை மொழியாக எந்தவொரு கலைமானி (பொது) பட்டம் ஒன்றை பெற்றிருத்தல். |
| 111 | அராபி Arabic | உரிய பாடத்திற்கு விசேட பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் அல்லது முக்கிய பாடமாக கற்று பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் முக்கிய பாடமாக கற்று பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் |
| 112 | ரஷ்ய Russian | |
| 113 | பிரெஞ்சு French | |
| 114 | ஜப்பானிய Japanese | |
| 115 | சீன Chinese | |
| 116 | கொரியன் Korean | |
| 117 | இந்தி Hindi | |
| 118 | ஜெர்மன் German | |
| 119 | குழந்தை உளவியல் மற்றும் பாதுகாப்பு Child Psychology and Care | குழந்தை உளவியலை ஒரு பாடமாக கற்ற அல்லது குழந்தை உளவியல் மற்றும் பாதுகாப்பு முக்கிய பாடமாக கற்று பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் |
| 120 | சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு Health and Social Care | சுகாதார ஊக்குவிப்பு விங்ஞானவியல் (விசேட) பட்டம் அல்லது சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பை ஒரு முக்கிய பாடமாக கற்று பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் |

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தகைமை |
|---|---|---|
| 121 | உடற் கல்வி மற்றும் விளையாட்டு Physical Education and Sport | விஞ்ஞானமானி (உடற்கல்வி)விசேட பட்டம் அல்லது விளையாட்டு விஞ்ஞானம் அல்லது முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞானமானி பட்டம் அல்லது உடற்கல்வி மற்றும் விளையாட்டை முக்கிய பாடமாக கற்று பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் |
| 122 | அரங்கக்கலை Performing Arts | அரங்கியற் கலை தொடர்பான விசேட பட்டம் அல்லது கலைமானி - விசேட (அரங்கக்கலை/நுண்கலை/நடனம்/சங்கீதம்) பட்டம் அல்லது நாடகம் மற்றும் அரங்கியல் தொடர்பான கலைமானி விசேட பட்டம் அல்லது கல்விமானி (நாடகமும் அரங்கியலும்) பட்டம் அல்லது அரங்கியற்கலை அல்லது நுண்கலையினை பிரதான பாடமொன்றாகத் தொடர்ந்துள்ள விசேட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 123 | நிகழ்ச்சி முகாமைத்துவம் Event Management | விருந்தோம்பல், சுற்றுலாத்துறை மற்றும் நிகழ்ச்சி முகாமைத்துவம் தொடர்பான முகாமைத்துவ பட்டம் அல்லது<br>நிகழ்ச்சி முகாமைத்துவத்தைப் பிரதான பாட மொன்றாகக் கொண்டுள்ள பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 124 | கைத்திறன்கலை Arts and Crafts | கட்புலக் கலை விசேடபட்டம் (சித்திரக்கலை, சிற்பக்கலை, அச்சுக்கலை, ஜவுளி மற்றும் ஆடை சார்ந்த கலைகள் போன்றன) அல்லது கட்புலக்கலை மற்றும் திட்டமிடல் விசேடபட்டம் (சித்திரக்கலை மற்றும் கிரபிக்) அல்லது கட்புலம் மற்றும் தொழில்நுட்பக் கலை விசேட பட்டம் அல்லது கலைமானி அல்லது நுண்கலைமானி விசேட பட்ட மொன்றைப் பெற்றிருத்தல் (சித்திரக்கலை/ கிரபிக்/ சிற்பக் கலை/ கட்புலம் மற்றும் தொழில்நுட்பக்கலை ஆகிய பாடங்களில் ஒரு பாடத்தையேனும் பிரதான பாடமொன்றாகத் தொடர்ந்திருத்தல்) |
| 125 | உள்ளக வடிவமைப்பு Interior Designing | உள்ளக வடிவமைப்புக் கலைக்கான விஞ்ஞானமானி பட்டம் அல்லது நிர்மாணமானி பட்டம் அல்லது உள்ளக வடிவமைப்புக்கலை தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்ற பட்டம் அல்லது<br>உள்ளக வடிவமைப்பினைப் பிரதான பாடமொன்றாகத் தொடர்ந்துள்ள பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 126 | நவநாகரீக வடிவமைப்பு Fashion Designing | கட்புலக்கலை விசேட பட்டம் (ஜவுளி மற்றும் ஆடைக்கலைகள்) அல்லது நிர்மாணமானி பட்டம் அல்லது நவநாகரீக வடிவமைப்பு மற்றும் தயாரிப்பு மேம்பாடு தொடர்பான பட்டம் அல்லது நவநாகரீக வடிவமைப்பினை பிரதான பாடமொன்றாக தொடர்ந்துள்ள பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 127 | கிரபிக் வடிவமைப்பு Graphic Designing | நிர்மாணமானி பட்டம் அல்லது கட்புலக்கலை மற்றும் திட்டமிடல் தொடர்பான கலைமானி பட்டம் (சித்திரம் மற்றும் கிரபிக்) அல்லது<br>கணணிப் பொறியியல் தொடர்பான பொறியியல் விஞ்ஞானமானி பட்டம் அல்லது கணணி விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமானி விசேட பட்டம் அல்லது<br>தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான விஞ்ஞானமானி விசேட பட்டம் அல்லது<br>தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப மானி பட்டம் அல்லது<br>பட்டத்தில் பிரதானமான பாடமொன்றாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடம் உள்ளடக்கப்பட்டுள்ள பட்டமொன்று அல்லது கணணி விஞ்ஞானப் பாடம் உள்ளடங்கியுள்ள விஞ்ஞான மானி பட்டம் அல்லது (மேலே குறிப்பிடப்பட்டுள்ள பட்டப் பாடநெறியின் மொத்தப் பாடத்தொகுதியின் 1/3 பகுதி பாடங்களை கிரபிக் வடிவமைப்பு தொடர்பான பாடங்களாக தொடர்ந்திருத்தல் வேண்டும்)<br>கிரபிக் வடிவமைப்பினை பிரதான பாடமொன்றாகக் கொண்டுள்ள பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 128 | நிலத்தோற்ற வடிவமைப்பு Landscaping | விவசாய விஞ்ஞானம் தொடர்பான பட்டமொன்றில் தோட்டவியல் விஞ்ஞானம்/ நிலத்தோற்ற வடிவமைப்பு ஆகிய பாடங்களைத் தொடர்ந்திருத்தல் அல்லது<br>நிலத்தோற்றவடி வமைப்பினை பிரதான பாடமொன்றாக தொடர்ந்துள்ள ஏதேனுமொரு விஞ்ஞானமானி பட்ட மொன்றைப் பெற்றிருத்தல். |
| 129 | பிரயோக தோட்டக்கலை தொழில் நுட்பக்கல்வி Applied Horticultural Studies | விவசாய விஞ்ஞானம் தொடர்பான பட்டமொன்றில் தோட்டவியல் விஞ்ஞானம்/ நிலத்தோற்ற வடிவமைப்பு ஆகிய பாடங்களைத் தொடர்ந்திருத்தல் அல்லது<br>பிரயோக தோட்டக்கலை விஞ்ஞானத்தை பிரதான பாட மொன்றாக தொடர்ந்துள்ள ஏதேனுமொரு விஞ்ஞானமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 130 | கால்நடை உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி Livestock Product Studies | விவசாய விஞ்ஞான பட்டமொன்றில் கால்நடை விஞ்ஞானம் கால்நடைவளங்களின் உற்பத்தித் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களை விசேடமாக தொடர்ந்திருப்பதுடன் அல்லது<br>கால்நடைவளர்ப்பு மீன்வளங்கள் தொடர்பான பட்டம் அல்லது<br>கால்நடை உற்பத்தி மற்றும் உணவுத் தொழில்நுட்பம்/ கால்நடை வளங்கள் உற்பத்தித் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமொன்றாகத் தொடர்ந்துள்ள ஏதேனுமொரு விஞ்ஞானமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 131 | உணவு உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி Food Processing Studies | உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பப் பட்டம் அல்லது<br>உணவு விஞ்ஞானம் மற்றும் போசனை தொடர்பான பட்டம் அல்லது<br>விவசாய விஞ்ஞானம் தொடர்பான பட்டமொன்றில் உணவு விஞ்ஞானம்/ உணவு உற்பத்தித் தொழில்நுட்பத்தை விசேடமாக தொடர்ந்திருத்தல் அல்லது<br>உணவு உற்பத்தித் தொழில்நுட்பம் அல்லது உணவுப் பதப்படுத்தல் தொழில்நுட்பவியலைப் பிரதான பாட மொன்றாக தொடர்ந்துள்ள ஏதேனுமொரு விஞ்ஞானமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |

tamilguru.lk

| பாடக் குறியீட்டு இலக்கம் | பாடம் | தகைமை |
|---|---|---|
| 132 | நீரியல் வளங்கள் தொழில் நுட்பக்கல்வி<br>Aquatic Resource Studies | நீரியல் வளங்கள் முகாமைத்துவம் மற்றும் கால்நடை விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமானி பட்டம் அல்லது விவசாய விஞ்ஞானம் தொடர்பான பட்டமொன்றில் கால்நடை விஞ்ஞானம்/ கால்நடைவளங்கள் உற்பத்தித் தொழில்நுட்பம்/ நீரியல் வளங்கள் தொழில்நுட்பப் பாடம் போன்றனவற்றை பாடங்களாகத் தொடர்ந்திருத்தல் அல்லது கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்வளம் தொடர்பான விஞ்ஞானமானி பட்டம் அல்லது மீன்பிடி மற்றும் சமுத்திரவியல் விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமானி பட்டம் அல்லது நீரியல் வளங்கள் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமொன்றாகத் தொடர்ந்துள்ள ஏதேனுமொரு விஞ்ஞானமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 133 | பெருந்தோட்டப் பயிர் உற்பத்தித் தொழில் நுட்பக்கல்வி<br>Plantation Product Studies | ஏற்றுமதி விவசாயம் தொடர்பான பட்டம் அல்லது<br>விவசாய விஞ்ஞானம் தொடர்பான பட்டமொன்றில் பெருந் தோட்டப் பயிர்கள்/ பெருந்தோட்டப் பயிர் உற்பத்தித் தொழில் நுட்பத்தை பாடமொன்றாக தொடர்ந்திருத்தல் அல்லது<br>பெருந்தோட்டப் பயிர் உற்பத்தித் தொழில்நுட்பத்தை பாடமொன்றாகக் கொண்ட ஏதேனுமொரு விஞ்ஞானமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 134 | நிர்மாணத் தொழில்நுட்பக் கல்வி<br>Construction Studies | சிவில் பொறியியல் கலை தொடர்பான பொறியியல் விஞ்ஞானமானி பட்டம் அல்லது நிர்மாணம் மற்றும் கட்டட சேவைகள் தொழில்நுட்பவியல் உள்ளடங்கிய பொறியியல் தொழில்நுட்பமானி பட்டம் அல்லது<br>தொழில் நுட்பமானி பட்டம் அல்லது<br>நிர்மாணத் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட வேறு ஏதேனுமொரு பட்டமொன்று அல்லது<br>ஏதேனுமொரு பட்டத்துடன் 2 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட பாடநெறிக் காலத்தையுடைய ஆகக் குறைந்தது NVQ 4 அல்லது அதனை விட உயர்ந்த மட்டத்திலான நிர்மாணத் தொழில்நுட்பக்கல்வி தொடர்பான டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல். |
| 135 | மோட்டார் எந்திரவியலில் தொழில்நுட்பக் கல்வி<br>Automobile Studies | தொழில்நுட்பமானி பட்டம் (மோட்டார் எந்திரவியல்) அல்லது<br>பொறியியல் விஞ்ஞானமானி (மோட்டார் எந்திரவியல்) பட்டம் அல்லது<br>மோட்டார் எந்திரவியல் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 136 | மின் மற்றும் இலத்திரனியல் தொழில் நுட்பக்கல்வி<br>Electrical and Electronic Studies | மின்பொறியியல் கலை தொடர்பான பொறியியல் விஞ்ஞான மானி பட்டம் அல்லது பொறியியல் தொழில்நுட்பமானி பட்டம் அல்லது<br>பிரயோக இலத்திரனியல் விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞானமானி விசேடபட்டம் அல்லது<br>மின் அல்லது இலத்திரனியல் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமொன்றாகக் கொண்டுள்ள பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 137 | ஜவுளி மற்றும் ஆடைத் தொழில்நுட்பக் கல்வி<br>Textile and Apparel Studies | நிர்மாணமானி பட்டம் அல்லது<br>ஜவுளி மற்றும் ஆடை தொடர்பான பொறியியல் விஞ்ஞான முதல் பட்டம் அல்லது தொழில்நுட்பவியல்மானி பட்டம் அல்லது<br>ஜவுளி மற்றும் ஆடைத் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 138 | உலோகப் புணைவுத் தொழில்நுட்பக் கல்வி<br>Metal Fabrication Studies | தொழில்நுட்பமானிபட்டம் ( எந்திரவியல்) அல்லது<br>எந்திரவியல் தொழில்நுட்பவியலைப் பிரதான பாடமொன்றாகக் கொண்ட சாதாரண பட்டமொன்று அல்லது<br>உலோக புணைவுத் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமொன்றாகக் கொண்டுள்ள பட்டமொன்று அல்லது<br>ஏதேனுமொரு பட்டத்துடன் ஆகக்குறைந்தது NVQ 3 அல்லது அதனை விட உயர்ந்த மட்டத்திலான உலோக புணைவுத் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல். |
| 139 | அலுமினியம் புணைவுத் தொழில் நுட்பக்கல்வி<br>Aluminum Fabrication Studies | தொழில்நுட்பமானிபட்டம் (சிவில்/ நிர்மாணம்/ எந்திரவியல்) அல்லது<br>அலுமினியம் புணைவுத் தொழில்நுட்பத்தைப் பிரதான பாடமொன்றாகக் கொண்டுள்ள பட்டமொன்றுஅல்லது<br>ஏதேனுமொரு பட்டத்துடன் ஆகக்குறைந்தது NVQ 3 அல்லது அதனை விட உயர்ந்த மட்டத்திலான அலுமினியம் புணைவுத் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல். |
| 140 | கணணி வன்பொருள் மற்றும் வலையமைப்பு<br>Computer Hardware and Networking | மூன்று வருட காலத்தையுடைய தகவல் தொழில்நுட்பம், கணணி விஞ்ஞானம், கணணி பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான பட்டம் (குறித்த பட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் பாடப் பகுதிகளை தொடர்ந்திருத்தல்) அல்லது<br>நான்கு வருட காலத்தையுடைய தகவல் தொழில்நுட்பம், கணணி விஞ்ஞானம்/கணணி பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான பட்டம் (குறித்த பட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் பாடப் பகுதிகளை தொடர்ந்திருத்தல்.) அல்லது<br>கணணி விஞ்ஞானத்தை பிரதான பாடமொன்றாகக் கொண்ட விஞ்ஞானமானி/ தொழில்நுட்பமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் அதன் மொத்தப் பாடத்தொகுதியின் 1/3 பகுதியை கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு பாடத்துறையில் தொடர்ந்து சித்தியடைந்திருத்தல்.<br><br>பாடத்துறைகள்<br>(i) Computer Hardware<br>(ii) Computer system Engineering<br>(iii) Computer Networks<br>(iv) Computer Architecture<br>(v) Operating System<br>(vi) Electronics<br>(vii) Arduino Technology<br>(viii) IT Security<br>(ix) Network Security<br>(x) Information Security<br>(xi) Cyber Security<br>(xii) Computer Hardware and Network related projects |
| 141 | உற்பத்தி<br>Manufacturing | மூன்று வருட இயந்திர பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 142 | சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல்<br>Tourism & Hospitality | சுற்றுலாத்துறை முகாமைத்துவ விஞ்ஞானமானி விசேட பட்டம் அல்லது<br>விருந்தோம்பல் முகாமைத்துவ விஞ்ஞானமானி விசேட பட்டம் அல்லது<br>விருந்தோம்பல் மற்றும் ஓய்வு முகாமைத்துவம் தொடர்பான நிர்வாகமானி பட்டம் அல்லது<br>விருந்தோம்பல், சுற்றுலாத்துறை வணிக நிகழ்ச்சி முகாமைத்துவம் தொடர்பான பட்டம் அல்லது<br>சுற்றுலாத்துறை முகாமைத்துவ விசேட பட்டம் அல்லது<br>சுற்றுலுலாத்துறை முகாமைத்துவ பட்டம் அல்லது<br>சுற்றுலாத்துறை மற்றும் கலாசார வளங்கள் முகாமைத்துவ பட்டம் அல்லது<br>சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பலை பிரதான பாடமொன்றாகக் கொண்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |
| 143 | வழங்கல் முகாமைத்துவம்<br>Logistic Management | பட்டத்தில் பிரதான பாடமொன்றாக வழங்கல் முகாமைத்துவப் பாடத்தைத் தொடர்ந்திருத்தல். |
| 144 | சந்தைப்படுத்தல்<br>Marketing | சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் தொடர்பாக அல்லது வியாபார நிர்வாகம் தொடர்பாக அல்லது வியாபார முகாமைத்துவம் தொடர்பாக அல்லது முகாமைத்துவம் தொடர்பான பட்டம் அல்லது வணிகமானி பட்டம் அல்லது பிரதான பாடமொன்றாக சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் உள்ளடங்கியுள்ள பட்டமொன்றைப் பெற்றிருத்தல். |

5.1.4. **வயதெல்லை:**
விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதி தினத்தன்று 35 வயதுக்கு (அதன் பிரகாரம் அதிகமாகக் கூடாது (அதன் பிரகாரம்2005.12.01ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன் மற்றும்1988.12.01 ஆந் திகதி அல்லது அதற்கு பின் பிறந்த திகதியைக் கொண்டவர்களுக்கு மட்டும் இதற்கு விண்ணப்பிக்க தகுதி உண்டு)

5.1.5. **ஏனையத் தேவைகள் :**

(i) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர் சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்ப இறுதித் திகதிக்கு இப் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு அவசியமான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(iv) அனைத்து விண்ணப்பதாரர்களும்இலங்கையில்எந்தப்பிரதேசத்திலும்சேவையாற்றுவதற்கும் பதவியில் கடமைகளை மேற்கொள்வதற்கும் போதுமான உடலியல் மற்றும் உளவியல் தகுதியைக்கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

(v) இப் பரீட்சைக்கு தோற்ற இருக்கும் சிறப்பு தேவையுடைய விண்ணப்பதாரிகள் இந்த பரீட்சைக்கு தோற்றினால் அது விண்ணப்பத்தில் குறிப்பிடப்படல் வேண்டும் மற்றும் தங்களுடைய விசேட தேவைகள் தொடர்பாக கட்டாயமாக வைத்திய சான்றிதழ் பிரதி ஒன்றினை விண்ணப்பத்தின் பிரதியுடன் இணைத்து "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், அபிவிருத்தி கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல" எனும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

06. ***விண்ணப்பிக்கும்முறை :***

6.1 இணையவழி (Online) தேர்வு விண்ணப்பத்தை ஆங்கிலத்தில் மட்டுமே பூர்த்தி செ ய ் ய வேண்டும். இணையவழி விண்ணப்பத்திற்காக தயாரிக்கப்பட்டுள்ள பொது ஆலோசனை படிவத்தை (Common Instructions) பதிவிறக்கவும். விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்யும் போது கண்டிப்பாக இந்த வழிமுறைகளைப் பின்பற்றவும். இணையவழி மூலமாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் திருத்தம் செய்வது அவசியமானால், விண்ணப்பங்கள் பெறப்படும் கடைசி திகதி வரை அவகாசம் வழங்கப்படுகிறது. முழுமையடையாத விண்ணப்பங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.

6.2 ***பரீட்சை நடைமுறை:***

6.2.1 இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடைபெறும்.

6.2.2 இவ் ஆட்சேர்ப்பு அறிவித்தலின் இறுதியில் அட்டவணை 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள நகரங்களில் நிறுவப்படும் பரீட்சை நிலையங்களில் மாத்திரம் பரீட்சை நடாத்தப்படும். விண்ணப்பதாரர்களால் கோரப்படும் நகரங்கள் அட்டவணை 03 இன் படி மாத்திரம் இருத்தல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பிக்கும் நகரத்தை பின்னராக மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. ஏதேனுமொரு நகரத்தில் பரீட்சை நிலையமொன்றை நிறுவுவதற்காக போதியளவு எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கவில்லை எனின், குறித்த விண்ணப்பதாரர்கள் அவர்கள் இரண்டாவது விருப்பாக தெரிவு செய்துள்ள நகரத்தில் அல்லது அண்மையிலுள்ள வேறு ஒரு நகரத்தில் நிறுவப்படும் பரீட்சை நிலையமொன்றில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். மேலும் உத்தேசிக்கப்பட்டுள்ள அனைத்து நகரங்களிலும் அல்லது அதிகளவிலான நகரங்களில் பரீட்சை நிலையங்களை நிறுவுவதற்காக போதியளவு எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கவில்லை எனின் பரீட்சையினை கொழும்பில் மாத்திரம் நடாத்துவதற்குரிய நடவடிக்கைகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும்.

6.2.3 அனைத்து விண்ணப்பதாரர்களும் இப் பரீட்சையில் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரு மொழி மூலத்தில் மாத்திரமே தோற்றுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) நியமனப் பாடத்திற்கான மொழி மூலமாக கருதப்படும்.

6.2.4 விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடும் பாடம், பாடத்திற்கான விருப்பு வரிசை, விண்ணப்பிக்கும் மொழிமூலம், பரீட்சை நிலையம் போன்றவற்றில் பின்னராக மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

6.2.5 பரீட்சை இரண்டு (02) வினாப்பத்திரங்களை கொண்டதாகும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இரண்டு (02) வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும். சித்தியடைவதற்காக ஒவ்வொரு வினாப் பத்திரத்திலும் ஆகக் குறைந்து 40%புள்ளிகளைப் பெற்றுக்கொள்வது கட்டாயமாகும்.

6.2.6 ஒருதடவையின் ஆட்சேர்ப்பு செய்யப்படும் எண்ணிக்கை நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும்.

6.3 ஒரு விண்ணப்பதாரர் ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே முன்னிலைப்படுத்த முடியும்.

6.4 தற்போது அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க பணிகளில் தொழில்புரிபவர்கள் அவர்களின் விண்ணப்பத்தின் பிரதியினை தனிப்பட்ட கோவையில் இடுவதற்காக பணிபுரியும் அலுவலகத்தின் நிறுவன தலைவரிடம் ஒப்படைத்தல் வேண்டும் மேலும் நேர்முக தேர்விற்கு அழைக்கப்படும் போது நிறுவன தலைவரால் சான்றுபடுத்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியுடன், சேவைச் சான்றிதழையும் வழங்க வேண்டும்.

6.5 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் எனும் ஊகிப்புடன் விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுத்தித் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னராக உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி

விண்ணப்பப்படிவத்தை நிகழ்நிலை மூலமாக அனுப்பி, விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியையும் சரியான முறையில் பூரணப்படுத்தி அனுப்பி யுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். பரீட்சைக்கான அனுமதிப்பத்திரங்கள் அனுப்பி வைக்கப்பட்டவுடன் அவ்விடயம் தொடர்பாக பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அனுமதிப்பத்திரங்கள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் அவ்விடயம் தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சை ஏற்பாட்டுக் கிளையில் விசாரிக்க வேண்டும். அவ்வாறாக விசாரிக்கும் போது விண்ணப்பதாரர்தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர் கொழும்பிற்கு வெளியே வசிக்கும் ஒருவராயின் குறித்த விபரங்களுடன் தொலைநகலூடாக பரீட்சை அனுமதிப் பத்திரத்தின் பிரதியொன்றைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு அறிவித்தலில் வழங்கப்பட்டுள்ளவாறு கோரிக்கைக் கடிதமொன்றை தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரிப்பது மிகவும் விளைதிறன் மிக்கதாக இருக்கும். அவ்வாறாக விசாரிக்கும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக தங்கள்வசம் விண்ணப்பித்த விண்ணப்பப்படிவத்தின் அச்சுப்பிரதியொன்றையும் அதனை தபால் செய்யும் போது கிடைக்கப்பெற்ற பதிவுத்தபால் இரசீதினையும் தயார் நிலையில் வைத்துக்கொள்வது பிரயோசனம்மிக்கதாக இருக்கும்.

07. **பரீட்சைக்குத் தோற்றுதல்:**

7.1 விண்ணப்பதார் ஒருவர் தனக்காக ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் உரிய பரீட்சை மண்டபத்திற்குரிய அனுமதிப்பத்திரத்தினை சான்றுப்படுத்தி முதல் தடவை குறித்த பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றும் தினத்தில் மண்டபப் பொறுப்பாளரிடம் கையளிக்க வேண்டும். பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிமுறைகளுக்கு பரீட்சைக்குத் தோற்றும் அனைவரும் உட்படுவர். குறித்த சட்டவிதிமுறைகள் மீறப்படும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனையொன்றிற்கு அவர் முகங்கொடுக்க நேரிடும்.

**குறிப்பு 3**

விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அல்லது பதவியொன்றை வகிப்பதற்குரிய தகைமைகளைப் பெற்றுள்ளார் என ஏற்றுக்கொள்ளப்படுவதற்குரிய சான்றல்ல என்பதுடன் பரீட்சையில் தோற்றுவதும் நியமனம் பெறுவதற்கான தகைமையாக கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

08. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :**

8.1 பரீட்சைக்குத் தோற்றுவோர் பரீட்சை மண்டபத்தில் தாம் பரீட்சைக்குத் தோற்றும் சகல பாடங்களின் போது பரீட்சை மண்டப பொறுப்பாளர் திருப்தியடையக் கூடிய வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். இதற்காக கீழே வழங்கப்பட்டுள்ள ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்:

i. தேசிய ஆளடையாள அட்டை;

ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;

iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

8.2 அதேபோன்று பரீட்சைக்குத் தோற்றுவோர் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காத வகையில் பரீட்சை மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். அவ்வாறாக தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்ததிலிருந்து பரீட்சை நிறைவடைந்து மண்டபத்திலிருந்து வெளியேறும் வரையில் பரீட்சை மேற்பார்வை உத்தியோகத்தர்கள் விண்ணப்பதாரர்களை அடையாளம் காணக்கூடிய வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மறைக்காமல் இருத்தல் வேண்டும்.

09. **பொய்யான தகவல்களை வழங்கியமைக்கான தண்டனை:**

விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தும் போது மிகவும் கவனமாகவும் சரியாகவும் தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சைக்குரிய சட்டதிட்டங்களுக்கமைய எவரேனும் ஒரு விண்ணப்பதாரர் தகைமையற்றவர் என வெளிப்படும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் வேளையில் அல்லது பரீட்சைக்குப் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்ததன்மை இரத்துச் செய்யப்படலாம்.

10. **பாடத்திட்டம்:**

10.1 **எழுத்துப்பரீட்சை :**

இப்பரீட்சையின் இரண்டு வினாப்பத்திரங்கள் உள்ளன. தகைமை பெறுவதற்காக இரண்டு வினாப் பத்திரங்களுக்கும் தோற்றுவது கட்டாயமாகும்.

(i) பொது உளச்சார்பு - காலம் ஒரு (01) மணித்தியாலம். (100புள்ளிகள்)

11. எண்கணித ரீதியான, மொழி ரீதியான மற்றும் படங்களைக் கொண்ட கட்டமைப்புக்கள் மற்றும் இடைத் தொடர்புகளுக்குரியதாக முன்வைக்கப்படும் முரண்பாடுகள் தொடர்பான பகுப்பாய்வுத்திறன், தர்க்க ரீதியிலான புரிந்துணர்வு, அர்த்தம் தெரிவிக்கும் திறன், வேறு நிலமைகளுக்கு ஏற்புடையதாக பிரயோகிக்கும் திறன், அளவீடு, காலம் மற்றும் இடைவெளி ஆகியவற்றிற்கிடையேயான தொடர்புகளை புரிந்துகொள்வதில் விண்ணப்பதாரருக்கு காணப்படும் திறன்களை அளவிட எதிர்பார்க்கப்படுகின்றது. பல்வேறு முறையிலான சிறிய ஐம்பது (50) வினாக்கள் இவ்வினாப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும். அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

(ii) பொதுஅறிவு - காலம் ஒரு (01) மணித்தியாலம். (100 புள்ளிகள்)
ஆசிரியர் தொழிற்துறைக்குரியதாக அத்துறை தொடர்பான பொது அறிவு மற்றும்/ அல்லது உள்நாட்டில் ஏற்பட்டுள்ள அல்லது ஏற்படும் கல்வியின் போக்குகள் தொடர்பான பொது அறிவு மற்றும் கல்வி, உயர்கல்வி, தொழில்நுட்பம், ஆசிரியர் கல்வி போன்ற துறைகள் தொடர்பாக 2010 ஆம் ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட தேசிய கல்வி நவீனமயப்படுத்தல் தொடர்பான பொது அறிவை பரீட்சிப்பதற்கான பல்தேர்வு முறையிலான சிறிய ஐம்பது (50) வினாக்களை உள்ளடக்கியதாகும். இவ் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

10.2 பொது நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

**குறிப்பு 4**

அடைந்துகொள்ள எதிர்பார்க்கும் குறிக்கோள்கள்

சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய பிரசுரிக்கப்படும் இவ் அறிவித்தலில் அல்லது பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளார்களா என்பதை பரீட்சித்தல் மற்றும் உடலியல் தகைமைகளைப் பரீட்சித்தல்.

10.3 **செயன்முறைப் பரீட்சை :**

செயன்முறைப் பரீட்சைக்காக விண்ணப்பதாரரால் தெரிவு செய்யப்படும் தலைப்பு ஒன்றின்கீழ் முன்வைப்பு ஒன்றை மேற்கொள்ள வேண்டும். இதற்காக ஐந்து (05) நிமிடங்களுக்குக் குறையாத காலம் வழங்கப்படும். இதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| தொடர் இலக்கம் | செயன்முறைப் பரீட்சையில் புள்ளி வழங்கும் அளவுகோள்கள் | உயர்ந்தபட்ச புள்ளிகள் | சித்தியடைவதற்கு அவசியமான ஆகக்குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | இலக்கு மற்றும் பிரவேசம் | 05 | 02 |
| 02 | ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு | 05 | 02 |
| 03 | தொடர்பாடலின் தெளிவு | 05 | 02 |
| 04 | நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 05 | முன்வைக்கும் நுட்ப முறைகளின் பாவணை | 05 | 02 |
| | மொத்தப் புள்ளிகள் | 25 | 10 |

**குறிப்பு 5**

அடைந்துகொள்ள எதிர்பார்க்கும் குறிக்கோள்கள்

ஆசிரியர் தொழிலுக்கு முக்கியமான கற்றல் - கற்பித்தல் செயன்முறை தொடர்பாக விண்ணப்பதாரர்களிடம் காணப்படும் திறன்களை அளவிடல்.

10.3.1 செயன்முறைப் பரீட்சை மேற்கொள்ளப்படும் முறை :

(i) செயன்முறைப் பரீட்சைக்காக ஐந்து (05) நிமிடங்களுக்கு குறையாத நேரம் வழங்கப்படும்.

(ii) செயன்முறைப் பரீட்சையில் வழங்கப்படக்கூடிய உயர்ந்தபட்சப் புள்ளி இருபத்தி ஐந்து (25) ஆகும்.

(iii) செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு அளவுகோள்களின் கீழ் ஆகக்குறைந்தது இரண்டு (02) புள்ளிகளையேனும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) செயன்முறைப் பரீட்சை கல்வி அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகத்தேர்வு குழுவொன்றினால் மேற்கொள்ளப்படும்.

10.3.2 அளவுகோள்களின் குறிக்கோள்கள் :

(i) இலக்கு மற்றும் பிரவேசம்

பாடத்தின் குறிக்கோள்களைத் தெளிவுபடுத்தல் மற்றும் பாடத்தில் பிரவேசிக்கும் திறனை மதிப்பீடு செய்தல்

(ii) ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு

ஆசிரியர் ஒருவர் என்ற வகையில் சிறந்த ஆளுமையைக் கொண்டிருத்தல் மற்றும் கற்பிக்கும் போது சிறந்த முறையில் குரலைக் கட்டுப்படுத்தும் திறனை மதிப்பீடு செய்தல்.

(iii) தொடர்பாடலின் தெளிவு

கற்றல் கற்பித்தல் செயன்முறையின் போது உரிய விடயங்களை வினைதிறன் மிக்க வகையில் தொடர்பாடலுக்குட்படுத்தும் திறனை மதிப்பீடு செய்தல்

(iv) நேர முகாமைத்துவம்
(iv) வழங்கப்படும் நேரத்தினுள் இலக்குகளை அடைந்து கொள்வதற்கான திறனை மதிப்பீடு செய்தல்.
(v) முன்வைக்கும்நுட்பமுறைகளின் பாவணை
இலக்குகளை அடைவதற்காக முன்வைக்கும்நுட்ப முறைகளை சிறந்த முறையில் உபயோகிக்கும் திறனை மதிப்பீடு செய்தல்.

11. **பரீட்சைக் கட்டணம்:**

11.1 பரீட்சைக்கான கட்டணம் ரூ.1200.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும்போது நிகழ்நிலை முறைமையூடாக வழங்கப்படும் கீழுள்ள கட்டணம் செலுத்தும் முறைகளூடாக மாத்திரம் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும்.

(i) எந்தவொரு வங்கியினதும் கடன் அட்டைகளைப் பயன்படுத்தி (Any Bank Credit Card)

(ii) இணையத்தினூடாக கட்டணம் செலுத்தும் வசதியுடன்கூடிய வங்கிப் பற்று அட்டையை பயன்படுத்தி (Through any bank debit card with internet transaction facilities)

(iii) இலங்கை வங்கி நிகழ்நிலை வங்கி மூலமாக ( Bank of Ceylon Online Banking Method)

(iv) எந்தவொரு இலங்கை வங்கிக் கிளைகளூடாகவும் ( Bank of Ceylon Teller Slip Payments)

**குறிப்பு 6**

மேற்படி முறைகளூடாக கட்டணம் செலுத்தவேண்டிய முறை தொடர்பான ஆலோசனைகள் இணையத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப ஆலோசனைகள் எனும் பகுதியில் தரப்பட்டுள்ளது.

11.2 கட்டணம் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக குறுந்தகவலூடாக (SMS) அல்லது மின்னஞ்சலூடாக அறியத்தரப்படும். பரீட்சைக்கான முழுக் கட்டணமும் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் பரீட்சைக் கட்டணத்தை குறைவாக செலுத்தியுள்ள விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் செலுத்தும் முறைகளூடாக பரீட்சைக் கட்டணங்களை செலுத்தும்போது ஏற்படக்கூடிய பிழைகள் தொடர்பாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்காது.

11.3 பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்படவோ அல்லது வேறு பரீட்சையொன்றிற்காக மாற்றம் செய்யப்படவோ மாட்டாது.

12. **பரீட்சைப் பெறுபேறுகள்:**

12.1 எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த விண்ணப்பதாரர்களது எழுத்துமூலப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சையின் மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் உள்ளடங்கும் விதமாக இறுதி பெறுபேறு ஆவணம் தயாரிக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரர்களுக்கும் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகளை அறிவிப்பதற்கு அல்லது www.results.exams.gov.lk இணையதளத்தில் பிரசுரிப்பதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

13. **விண்ணப்பப்படிவங்களை நிரப்புவதற்கான ஆலோசனைகள்:**

கீழே வழங்கப்பட்டுள்ள அட்டவணைகளை (01, 02, 03, 04 மற்றும் 05) உபயோகித்து நிகழ்நிலை மூலமான விண்ணப்பப்படிவம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 01**

| மொழிமூலம் | குறியீடு எண் |
|---|---|
| சிங்கள மொழிமூலம் | 2 |
| தமிழ் மொழிமூலம் | 3 |
| ஆங்கில மொழிமூலம் | 4 |

**அட்டவணை 02**

| மாகாணம் | குறியீடு எண் |
|---|---|
| மேல் மாகாணம் | 01 |
| மத்திய மாகாணம் | 02 |
| தென் மாகாணம் | 03 |
| வடக்கு மாகாணம் | 04 |
| கிழக்கு மாகாணம் | 05 |
| வடமேல் மாகாணம் | 06 |

**அட்டவணை 03**

| மாவட்டம்/நகரம் | குறியீடு எண் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |

tamilguru.lk

| | |
|---|---|
| வடமத்திய மாகாணம் | 07 |
| ஊவா மாகாணம் | 08 |
| சபரகமுவ மாகாணம் | 09 |

| | |
|---|---|
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| மன்னார் | 11 |
| வவுனியா | 12 |
| முல்லைத்தீவு | 13 |
| கிளிநொச்சி | 14 |
| மட்டக்களப்பு | 15 |
| அம்பாறை | 16 |
| திருகோணமலை | 17 |
| குருநாகல் | 18 |
| புத்தளம் | 19 |
| அநுராதபுரம் | 20 |
| பொலநறுவை | 21 |
| பதுளை | 22 |
| மொணராகல | 23 |
| இரத்தினபுரி | 24 |
| கேகாலை | 25 |

| பாட குறியீட்டு இலக்கம் | பாடம் | தேசிய பாடசாலைகள் | | |
|---|---|---|---|---|
| | | சிங்கள மொழிமூலம் | தமிழ் மொழிமூலம் | ஆங்கில மொழிமூலம் |
| 101 | இரசாயனவியல் | 130 | 36 | 32 |
| 102 | பௌதீகவியல் | 176 | 55 | 43 |
| 103 | உயிரியல் | 106 | 38 | 30 |
| 104 | விவசாய விஞ்ஞானம் | 84 | 24 | 06 |
| 105 | இணைந்த கணிதம் | 83 | 40 | 30 |
| 106 | பொறியியல் தொழில்நுட்பவியல் | 79 | 39 | 0 |
| 107 | உயிர்முறைமை தொழில்நுட்பவியல் | 48 | 18 | 0 |
| 108 | தொழில்நுட்பவியலுக்காக விஞ்ஞானம் | 86 | 49 | 0 |
| 109 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 59 | 52 | 33 |
| 110 | ஆங்கிலம் | | | 54 |
| 111 | அரபு | 1 | 9 | |
| 112 | ரஷ்ய | 3 | 0 | |
| 113 | பிரெஞ்சு | 61 | | |
| 114 | ஜப்பானிய | 37 | | |
| 115 | சீன | 109 | | |
| 116 | கொரிய | 135 | | |
| 117 | இந்தி | 12 | | |
| 118 | ஜெர்மன் | 61 | | |
| 119 | குழந்தை உளவியல் மற்றும் பாதுகாப்பு | 5 | 3 | |
| 120 | சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு | 2 | 2 | |
| 121 | உடற் கல்வி மற்றும் விளையாட்டு | 5 | 2 | |
| 122 | அரங்கக் கலை | 1 | 1 | |
| 123 | நிகழ்ச்சி முகாமைத்துவம் | | 3 | |
| 124 | கைத்திறன் கலை | 3 | 4 | |

| பாட குறியீட்டு இலக்கம் | பாடம் | தேசிய பாடசாலைகள் | | |
|---|---|---|---|---|
| | | சிங்கள மொழிமூலம் | தமிழ் மொழிமூலம் | ஆங்கில மொழிமூலம் |
| 125 | உள்ளக வடிவமைப்பு | 4 | 2 | |
| 126 | நவநாகரீக வடிவமைப்பு | 8 | 6 | |
| 127 | கிரபிக் வடிவமைப்பு | 11 | 8 | |
| 128 | நிலத்தோற்ற வடிவமைப்பு | 3 | 3 | |
| 129 | பிரயோக தோட்டக்கலை தொழில்நுட்பக் கல்வி | 1 | 6 | |
| 130 | கால்நடை உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி | 2 | 3 | |
| 131 | உணவு உற்பத்தி தொழில்நுட்பவியல் கல்வி | 4 | 7 | |
| 132 | நீரியல் வளங்கள் தொழில்நுட்பக்கல்வி | 3 | 3 | |
| 133 | பெருந்தோட்ட பயிர் உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி | 7 | 2 | |
| 134 | கட்டுமானத் தொழில்நுட்பக் கல்வி | 2 | 5 | |
| 135 | மோட்டார் எந்திரவியல் தொழில்நுட்பக் கல்வி | 1 | 3 | |
| 136 | மின் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பக் கல்வி | 7 | 6 | |
| 137 | ஜவுளி மற்றும் ஆடைகள் தொழில்நுட்பக் கல்வி | 6 | 4 | |
| 138 | உலோக புனைவுத் தொழில்நுட்பக் கல்வி | 1 | | |
| 139 | அலுமினிய புனைவுத் தொழில்நுட்பக் கல்வி | | 1 | |
| 140 | கணினி வன்பொருள் மற்றும் வலையமைப்பு | 9 | 5 | |
| 141 | உற்பத்தி | | 2 | |
| 142 | சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் | 7 | 12 | |
| 143 | வழங்கல்கள் முகாமைத்துவம் | 3 | 1 | |
| 144 | சந்தைப்படுத்தல் | 2 | 4 | |

14. விண்ணப்பங்கள் இணையவழி ஊடாக மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும். தற்போது அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் விண்ணப்பப்படிவத்தின் 15 ஆம் இலக்க தலைப்பின் கீழ் தமது திணைக்களத் தலைவர் மூலமாக உறுதிப்படுத்தப்பட்ட அச்சிடப்பட்ட பிரதி நேர்முகத்தேர்வின் போது முன்னிலைப்படுத்துவது கட்டாயமாகும்.

15. நேர்முகப் பரீட்சைகளுக்கு உரிய தினத்தில் சமுகமளிக்காத விண்ணப்பதாரர்கள் தொடர்பாக ஒரு போதும் மீண்டும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

16. அதேபோன்று நேர்முகப்பரீட்சை நடைபெறும் தினத்தில் அனைத்து சான்றிதழ்களும் முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் பின்னராக முன்னிலைப்படுத்தப்படும் எந்தவொரு சான்றிதழ்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

17. தங்களது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும் எந்தவொரு விடயத்தையும் பின்னராக மாற்றத்திற்குட் படுத்துவதற்கான வாய்ப்பு வழங்கப்படமாட்டாது.

18. இவ் அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனுமொரு விடயம் காணப்படின்குறித்தவிடயம் தொடர்பாக தீர்மானிக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளரைச் சாரும் என்பதுடன் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் ஒரு பகுதியை அல்லது முழுமையாக நிரப்புதல் அல்லது நிரப்பாதிருத்தல் தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளரையே சாறும்.

19. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ் அறிவித்தலில் மொழிகளிடையே ஏதேனும் வேறுபாடுகள் காணப்படும் பட்சத்தில் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்களமொழி மூலமானஅறிவித்தல் சரியானதாக கருத்தில் கொள்ளப்படும்.

எம். என். ரணசிங்ஹ,
செயலாளர்.

கல்வி அமைச்சு,
இசுருபாய,
பெலவத்தை, பத்தரமுல்ல,
2023.11.14.

11-435

**கவனிக்க.- மேலே பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தல்களுடன் மேலதிக அறிவித்தல்களை தயவு செய்து 17.11.2023 ஆந் திகதிய ஆந் திகதி பிரசுரிக்கப்பட்ட அரசாங்க வர்த்தமானியில் பார்க்கவும்.**

வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனியினால் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.
www.documents.gov.lk

tamilguru.lk